1979 ஏப்ரல் 11

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தாங்கள் கொடுத்திருப்பது ஆய்விலே இருக்கிறது. விவரம் வேண்டுமானால் அறையிலே வந்து கேளுங்கள்.

திரு. ரா. மார்க்கபந்து ; தலைவரவர்களே, ஆசிரியர்கள் இரண்டு நாட்களாகக் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அது பற்றி........

(திரு. சேலம் மு. ஆறுமுகம் எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த மன்றத்திலே 42-வது விதியின் கீழோ அல்லது 41-வது விதியின் கீழோ எடுத்துக்கொள்ளப்படுகின்றவைகளைத் தவிர, மற்றவைகளைப் பற்றி இன்னும் அரசுக்கு அறிக்கையோ அல்லது அரசின் பதிலோ வரவில்லை என்று பொருள். மேற்கொண்டு விவரம் தெரிய வேண்டுமென்றால் அறையிலே கேளுங்கள். அதுதான் முறை.

திரு. செ. சிவசாமி : 42-வது விதியின்கீழ் கொடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அறையிலே வந்து கேளுங்கள்.

(6) கவன ஈர்ப்பு.

வெலிங்டன் ரிசர்வாயர் மூலம் பாசனம் பெறும் நிலங்களுக்கு தண்ணீர் தீர்வை உயர்த்தப்பெற்றுள்ளது குறித்து.

திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

> '' தென்னாற்காடு மாவட்டம் வெலிங்டன் ரிசர்வாயர் மூலம் தண்ணீர் பெறும் விருத்தாச்சலம் தாலுக்காவிலுள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்குத் தண்ணீர் தீர்வை உயர்த்தியதும் அதனால் அங்கு ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் —

திரு. பி. முசிரிபுத்தன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அரசு ஆணை எண். 1399, வருவாய், 1971 ஆம் ஆண்டு மே திங்கள்

10 ஆம் நாளில் தொழுதூர் வெல்லிங்டன் நீர்த்தேக்கத்தினால் பயனடையும் நிலங்களுக்குக் கீழ்க்கண்டவாறு தண்ணீர் மேல் வரியும், தண்ணீர் தீர்வையும் நிர்ணயிக்கப்பட்டன :—

புன்செய் நிலங்கள்.

பயிர் விவரம்.	தண்ணீர் மேல்வரி வீதம். (ஓர் ஏக்கருக்கு.)
	ரூ. பை.
முதல் போகப்பயிர்	15.00
இரண்டாம் போகப்பயிர்	7.50
மூன்றாம் போகப்பயிர்	3.75
" துபசல் " பயிர்	22.50

நன்செய் நிலங்கள்.

பயிர் விவரம்.	தண்ணீர்த் தீர்வை வீதம். (ஓர் ஏக்கருக்கு)
	ரூ. பை.
ஒரு போகப் பயிர் நன்செய் நிலங்கள்	15.00
இரு போகப் பயிர் நன்செய் நிலங்கள்	22.50

2. தண்ணீர் மேல்வரியும், தண்ணீர்த் தீர்வையும் உயர்த்தியதற்கு காரணங்கள் பின்வருமாறு:—

(1) தொழுதூர் வெல்லிங்டன் நீர்த்தேக்கத்திலிருந்து கடந்த 10 ஆண்டுகளாக ஒழுங்காகவும், உறுதியாகவும் பாசனத்திற்குத் தண்ணீர் விடப்படுகிறது.

(2) சிதம்பரம், கடலூர் மற்றும் விருத்தாச்சலம் வட்டங்களில் துளைக் கிணறுகள், குழாய்க் கிணறுகள் ஆகியவற்றால் பயனடையும் நிலங்களுக்கு விதிக்கப்படும் தண்ணீர் மேல் வரியோடு ஒப்பிட்டால் தொழுதூர் வெல்லிங்டன் நீர்த்தேக்கத்தினால் பயனடையும் நிலங்களுக்கு விதிக்கப்பட்ட தண்ணீர் மேல் வரி அதிகமில்லை.

(3) மற்ற தனிச் சிறு பாசனத் திட்டங்களினால் பயனடையும் நிலங்களுக்கு விதிக்கப்படும் தண்ணீர் மேல்வரி வீதத்திற்கொப்ப தொழுதூர் வெல்லிங்டன் நீர்த்தேக்கத்தினால் பயனடையும் நிலங்களுக்கும் தண்ணீர் மேல்வரி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1979 ஏப்ரல் 11] [திரு. பி. முசிரிபுத்தன்]

(4) பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தினால் பயனடையும் நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 25 தண்ணீர்த் தீர்வை வசூலிக்கப்படும்போது, தொழுதூர் வெல்லிங்டன் நீர்த்தேக்கத்தினால் பயனடையும் நிலங்களுக்கு ஒரு ஏக்கருக்கு ரூபாய் 15 மட்டும் தண்ணீர்த் தீர்வை நிர்ணயித்திருப்பது குறைவானதே ஆகும்.

(5) இத்திட்டம் கூடுதல் தண்ணீர்த்தீர்வை, கூடுதல் தண்ணீர் மேல்வரி மற்றும் மேம்பாட்டு வரி விதிப்பிற்கு உட்படவில்லை.

3. தொழுதூர், வெல்லிங்டன் நீர்த்தேக்கத்தினால் பயனடையும் விவசாயிகளுக்கு பின்வரும் சலுகைகள் அளிக்க முடிவு செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது :

(1) 1379 ஆம் பசலி ஆண்டிலிருந்து வசூலிக்கப்பட வேண்டியிருந்த தண்ணீர் மேல்வரி மற்றும் தண்ணீர் தீர்வை 1386 ஆம் பசலி ஆண்டிலிருந்து (1976 ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 1 ஆம் நாள் முதல்) வசூலிக்கப்படும்.

(2) 1386 ஆம் பசலி ஆண்டில் செலுத்த வேண்டிய பாக்கித் தொகையும், தற்போதுள்ள நிலுவைத் தொகையும் 1388 ஆம் பசலி ஆண்டில் வசூலிக்கப்படும்.

(3) 1387 ஆம் பசலி ஆண்டில் செலுத்த வேண்டிய, பாக்கித் தொகையும், 1389 ஆம் பசலி ஆண்டில் செலுத்த வேண்டிய தொகையும் 1389 ஆம் பசலி ஆண்டில் வசூலிக்கப்படும்.

4. தண்ணீர் தீர்வை விதங்களைச் சீர் செய்வது குறித்து பரிசீலனை செய்து அறிக்கை அனுப்ப 1977 ல் அரசால் ஒரு குழு நியமிக்கப்பட்டது. இக் குழு, இம் மாகாணத்திலுள்ள நீர்த்தேக்கத் திட்டங்களில் விதிக்கப்படும் தண்ணீர்த்தீர்வை சம்பந்தப்பட்ட விஷயங்களையும் மற்றவைகளையும் பரிசீலனை செய்யும். குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

[முற்பகல் 11—30.]

திரு. துரை முத்துசாமி : தலைவர் அவர்களே, தண்ணீர் தீர்வை உயர்த்தியதன் விளைவாக அரசுக்கு எவ்வளவு ரூபாய் கூடுதலாக கிடைக்கிறது ? விவசாயிகளுக்கு அவர்களின் நெல்லுக்குச் சரியான விலை கொடுக்கப்படவில்லை என்ற காரணத்தால் அவர்கள் பெரும் அவதிக்குள்ளாகியிருப்பது அரசுக்குத் தெரியுமா ? அதற்குப் பரிசீலனை செய்து இந்த ஆண்டு தீர்வையை நீக்கிவிட அரசு முன் வருமா என்றெல்லாம்....

திரு. பி. முசிரிபுத்தன் : (அமைச்சரின் பேரவைச் செயலர்) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலில் கேட்ட கேள்வியை தனிக் கேள்வியாகப் போடவும். பதில் தயார் செய்து தருகிறோம். இரண்டாவது கேட்ட கேள்வி— அது இந்தத் துறையை சேர்ந்தது அல்ல.